சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.25/2024</u>

16.03.2026

வா.சா. 2 திரு.சிங்காரவேல் (எ) சிங்காரவடிவேல் , த/பெ. முத்துக்குமரசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சம்பந்தமாக விவரம் எனக்கு நன்றாக தெரியும். புல எண்.83/9 க்கு அருகில் எனக்கு இடம் உள்ளதா என்றால் உள்ளது. நான் கிரயம் வாங்கிய சொத்து ஒரு குழி ரூ.3,500/- என வாங்கினேன். பிரதிவாதியிடம் நான் கிரய ஒப்பந்தம் செய்துக்கொண்ட போது ஒரு குழி ரூ.3,700/- என ஒப்பந்தம் செய்துள்ளேன். நான் பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவி பிரதிவாதி மீது பேரளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் பிரதிவாதியை காவல்நிலையம் அழைத்து ஆவணம் எழுதி வாங்கி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் எழுதியபோது தாவா சொத்திற்குண்டான ஆவணங்கள் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு அருகேயுள்ள இடத்தை குறைந்த விலைக்கு வாங்கிவிட்டு தாவா சொத்தையும் பிரதிவாதியிடம் குறைந்த விலைக்கு கேட்டதால்தான் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த ஆவணமும் எங்களுக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு ரூ.4,55,000/- கொடுக்க வேண்டும் என அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றாலும் பிரதிவாதி அதற்கு பதிலறிவிப்பு கொடுத்த பின்னிட்டு அந்த அறிவிப்பின் மீது மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு நான் ஊரில் இருந்தேனா என்றால் நான் அவ்வப்போது வந்து சென்றுகொண்டு தான் இருந்தேன். வழக்கு விவரங்களை நான் போனிலும் எனது மனைவி நேரிலும் வழக்கறிஞருக்கு சொன்னோம். புல எண்.83/9 நிலம் பிரதிவாதிக்கு சொந்தமானது இல்லை என தெரியவந்தவுடன் பணத்தை திரும்ப தருமாறு கேட்டேன். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஒரு சொத்தை வாங்குவதற்கு முன்பு ஆவணங்களை பார்த்து வாங்கவேண்டும் என்றால் சரிதான். நான் எந்தவித ஆவணத்தையும் பார்க்காமல் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டதாக

சொல்வது தவறனாது என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையில் கிரய ஒப்பந்தம் செய்திருந்தால் ஆவணங்களை வாங்கி பார்த்த பின்னிட்டு கிரய ஒப்பந்தம் செய்திருப்போம் என்றாலும் நான் சொல்வது போல் கிரய ஒப்பந்தமே ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி விவசாயி என்பதால் அவரை ஏமாற்றி பணம் பறிப்பதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வாங்கிய பணத்தை இரண்டு தவணைகளில் திரும்ப செலுத்திவிட்டார் என்றாலும் ஆவணத்தை நான் திரும்ப கொடுக்காமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.